திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி சேக்காடு, இந்து கல்லூரி அருகில் நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை சார்பாக ஆவடி பட்டாபிராம் இரயில் நிலையங்களுக்கு இடையில் ரூ28.30 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள இரயில்வே கீழ் பாலத்தை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி ஆகியோர் முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ முன்னிலையில் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள் அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ், சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, திருத்தணிஎஸ்.சந்திரன், மேயர் கு.உதயகுமார்,ஆணையர் தர்பகராஜ் நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் என்.சாந்தி, மண்டல குழு தலைவர் ஜோதிலட்சுமி நாராயணபிரசாந்த் மற்றும்அரசு அதிகாரிகள் நெடுஞ்சாலை துறை அதிகாரிகள் மாமன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை! ஏ.வி.ஆறுமுகம் ஏற்பாட்டில்! முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

திருவொற்றியூர் மத்திய பகுதி தி.மு.க. இளைஞரணி சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!

பேராசிரியர் சுபவீரபாண்டியன் சிறப்புரை! கலாநிதி வீராசாமி எம்.பி. - கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. - தி.மு.தனியரசு பங்கேற்பு!

சென்னை, செப்.15- திருவொற்றியூர் மத்திய பகுதி இளைஞரணி சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மாபெரும் பொதுக்கூட்டம் திருவெற்றியூர் மத்திய பகுதி செயலாளரும், இரண்டாவது மண்டலக் குழு தலைவருமான ஏ.வி. ஆறுமுகம் ஏற்பாட்டில் 11.9.2023, திங்கட்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில் சின்னமாத்தூர் சாலை, விநாயகர் கோயில் அருகில் நடைபெற்றது. இப்பொதுக்கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம், எம்.எல்.ஏ தலைமை வகித்தார்.

திராவிட இயக்க தமழிர் பேரவை பொதுச் செயலாளர் பேராசிரியர் சுபவீர பாண்டியன் சிறப்புரை யாற்றினார்.

இக்கூட்டத்தில் டாக்டர் கலாநிதிவீராசாமி எம்.பி, கே.பி.சங்கர் எம்.எல்.ஏ, 1வது மண்டல குழுத் தலைவர் தி.மு.தனியரசு எம்.சி. எஸ்.நந்தகோபால், வை.மா. அருள்தாசன், வ.முத்துசாமி ஆகியோர் பேசினர்.

இதில் ஆர்.டி.ரமேஷ்குமார், வி.ஜி.தினகரன், துர்கா கோதண்டம், என். கிருஷ்ணமூர்த்தி, எஸ். ஸ்டாலின், பா.செல்வராஜ், என்.விஜயரங்கன், எ.ஞானமூர்த்தி, எஸ். ஸ்ரீதர், சாலை டி.கணேசன், மு.செல்வம், டி.கரிகாலச்சோழன், மிசா.பா.மதிவாணன் வி.ராமநாதன், குறிஞ்சி எஸ்.கணேசன், மு. ராஜேந்திரன், டி.ராமகிருஷ்ணன், அறிவழகி, எம்.ஆனந்தன், என்.பரந்தாமன், ஜெ.ஜெ.ஜெய்மதன், டி.ஏ.ராஜீ இரா.முருகேசன், பி.சாந்தி, புழல். எம்.நாராயணன், ஜி.துக்காராம், ஜி.தயாளன் மி.வே.கருணாகரன், பெ.சரவணன், ஜி.ராஜேந்திரன், ந.திருசங்கு, இ.குமரவேல், யு. எஸ்.குறலரசன், அ.இந்துமதி, எம்.வஜ்சிரவேல், ஆர்.சி.ஆசைதம்பி, எம். பி.குமார், ஆர்.எஸ்.சம்பத், கே.பிராபாவதி, இரா.குமரேசன், தா.கார்த்திகேயன், டி.சி.வி. மணிகண்டன், எம்.எல்.சரவணன் குறுத்து சி.முனுசாமி, க.வி.சதீஷ்குமார், கேபிள்டிவி எம். ராஜா, ஆர்.சுந்தர், ஏ.கா. கார்த்திகேயன், மு.சிவக்குமார், எம்.ஜெயசந்திரன்,

மு.மாணிக்கவேல், பி.தமிழரசு, கே.கண்ணன், கே.பி.சொக்கலிங்கம், கே.பவுல், எஸ்.தமிழ்ச்செல்வன் டி.சி.வி.ராஜகுமாரி, உமா சரவணன், சரண்யா கலைவாணன், சுசிலா ராஜா, பானுமதி சுந்தர், ஆர்.தினேஷ் குமார், எம். சந்திரகுமார், எஸ்.ஆர் மலைராஜ், வி.வீரமுத்து, இ.வி.சரவணன், ஆர். மோகனசுந்தரம், பொன். கோ.விஜயன், எஸ்.மகேந்திரன், எஸ்.ஆறுமுகம், ஜி.தினேஷ், எஸ்.கணேஷ்,

எம்.ராம்குமார், ஒய். ரஜினி நந்தி, ஆர்.ரஜினி பாபு, பி.எஸ்.சைனஸ், எஸ்.பாஸ்கர், ஆர்.டில்லி, டி.டி.எம்.பாபு, வி.பழனிவேல் சந்தானகிருஷ்ணன், கே.கார்த்திகேயன், மா.ஜெயராமன், மா.எத்திராஜ், அ.அப்துல் சலிம், ஆர்.டி.மதன்குமார், கேபிள்டிவி. த.கணேசன், சி.எஸ்.எஸ்.டி.சீனிவாசன், மோரை மு.சதீஷ்குமார், டி.ஜி.ஆர். மணிவண்ணன், ஜி.கே.இனியவன் உள்ளிட்ட் பலர் கலந்து கொண்டனர்.

திருவெற்றியூர் மத்திய பகுதி பொருளாளர் எம். எஸ்.நாகலிங்கம் நன்றி கூறினர்.

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி அறிமுகம் - ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட கழகச் செயலாளர் - ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ., அறிவிப்பு!

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.கழக மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி அவசர ஆலோசனைக் கூட்டம் நாளை 16-09-2023 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் பூவிருந்தவல்லி ஜி.ஆர்.டி.அருகில் உள்ள ஹோட்டல் நாவலடியில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எனது தலைமையில் நடைபெறுகிறது. இதில் கழக மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் சேலம் சுஜாதா, தலைமை செயற்குழு உறுப்பினரும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில நிர்வாகிகள் சி.ஜெராल்டு, பிரபு கஜேந்திரன், மாவட்ட கழக நிர்வாகிகள் ம.இராஜி, வி.ஜெ.சீனிவாசன், காயத்திரி ஸ்ரீதர், எஸ். ஜெயபாலன், ப.நரேஷ்குமார், பொதுகுழு உறுப்பினர்கள் த. எத்திராஜ், ஜி. ராஜேந்திரன். கு.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ் செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனாசுதாகர், பூவிருந்தவல்லி நகர செயலாளர் ஜி.ஆர்.திருமலை ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்

இக்கூட்டத்தில் முன்னதாக மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சங்கீதா சீனிவாசன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் கு.தமிழ்செல்வி ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார்கள்

மேற்படி கூட்டத்திற்கு மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர் திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி தலைவர்கள், துணைத்தலைவர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1. கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் குறித்து.
2. மகளிர் அணியில் புதிய உறுப்பினர்கள் சேர்த்தல் குறித்து.
3. வேலூரில் நடைபெற உள்ள கழக முப்பெரும் விழா.
4. 2024ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் பணிகள் குறித்து.
5. கழக ஆக்கப் பணிகள்.

ஆவடி சா.மு.நாசர் ,எம்.எல்.ஏ.
செயலாளர்,
திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (14.09.2023) தருமபுரி மாவட்டம், கோபாலம்பட்டி, பேட்ராய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான 2.93 ஏக்கர் நிலத்தினை அளவீடு செய்ததன் மூலம் 1,50,000 ஏக்கரை நிறைவு செய்து, 1,50,001வது ஏக்கரை நில அளவீடு செய்யும் பணியினை தொடங்கி வைத்தார். உடன் தர்மபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கி.சாந்தி, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம் பெ.சுப்பிரமணி, இந்து சமய அறநிலையத்துறை தனி அலுவலர் (ஆலய நிலங்கள்) திருமதி ஜி.விஜயா, மண்டல இணை ஆணையர் திருமதி வே.சபர்மதி, தருமபுரி மாவட்ட அறங்காவலர் குழுத்தலைவர் பெ.கௌதமன், தருமபுரி உதவி ஆணையர் மா.உதயகுமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை உயர்நீதிமன்ற

நீதிபதிகளாக 5 பேர் பதவியேற்பு!

சென்னை, செப்.15

சென்னை உயர்நீதிமன்ற கூடுதல் நீதிபதிகள் 5 பேர் இன்று நிரந்தர நீதிபதிகளாக பதவியேற்றுக் கொண்டனர்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் கூடுதல் நீதிபதிகளாக இருந்த எ.எ.நக்கீரன், நிடுமொலு மாலா, எஸ். சௌந்தர், சுந்தர் மோகன், கபாலி குமரேஷ் பாபு ஆகிய 5 பேரை நிரந்தர நீதிபதிகளாக நியமித்து குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு உத்தரவிட்டார்.

இந்நிலையில் சென்னை உயர்நீதிமன்றத்தில் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்ற விழாவில் 5 பேரும் நிரந்தர நீதிபதிகளாக பதவியேற்றுக் கொண்டனர்.

அவர்களுக்கு தலைமை நீதிபதி சஞ்சய் கங்கபுர்வாலா பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

இதேபோல கர்நாடக உயர்நீதிமன்ற கூடுதல் நீதிபதிகளாக இருந்த அனந்த் ராமநாத் ஹெக்டே, ஹேமலேகா ஆகியோரையும் நிரந்தர நீதிபதிகளாக நியமித்து குடியரசுத் தலைவர் உத்தரைவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

திராவிடர் கலாச்சாரம்!



ஆரியக் கலாச்சாரம் வேறு; திராவிடர் கலாச்சாரம் வேறு என்பது பற்றி, ஆராய்ச்சியாளர்கள் தெளிவாகவே கூறியுள்ளனர்.

இந்தியாவிலேயே முதன் முதல் நாகரிகத்தைப் புகுத்தியவர்கள் ஆரியர்கள்தான் என்ற பொய்யுரை ஒழியக் காலம் பிடித்தது.

ஆரியத்தின் துணையின்றி, மிகப் பழங்காலம் தொட்டு, இங்கே வளமான ஒரு நாகரிகம் ஓங்கியிருந்த உண்மையை, உலகு உணர நாட்களாயின.

பண்டைத் தமிழரின் வாழ்வு பாழ்பட்டதும், வீரம் சரிந்ததும், கலை கறையானதும், நிலை குலைந்ததும், ஆரியத்தின் கூட்டுறவால் நேரிட்ட அவதிதான் எனும் உண்மையை உலகு முதலிலே தெரிந்துகொள்ளவில்லை. இந்தியாவை ஆரிய வர்த்தமென்று கூறியும், இந்திய நாகரிகத்தையே ஆரிய நாகரிகம் என்று மொழிந்தும் உலகு கிடந்தது.

பேராசிரியர் சர்.ஜான் மார்ஷல், திராவிடப் பண்புகளை ஆராய்ந்தறிந்து கூறிய போதுதான், மேனாட்டாரின் கண்களிலிருந்த கறையும் கருத்திலிருந்த மாசும் நீங்கிற்று. பிறகு ஆரியம், திராவிட நாகரிகத்தை எவ்வளவு பாழ்படுத்திற்று என்ற ஆராய்ச்சி வரலாயிற்று.

- பேரறிஞர் அண்ணா

பேரறிஞர் அண்ணா – தந்தை பெரியார் பிறந்தநாள்!

கடலூர் கிழக்கு மாவட்டத்தில் - அண்ணா, பெரியார் சிலைகளுக்கு மாலை!

கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!

கடலூர், செப். 15 - பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் மற்றும் 17.9.2023 தந்தை பெரியார் பிறந்தநாள் அன்று கடலூர் கிழக்கு மாவட்டத்தில் மாநகர, ஒன்றிய, நகர. பகுதி, பேரூர் பகுதிகளில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா மற்றும் தந்தை பெரியார் அவர்களின் சிலை மற்றும் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, கழக கொடியேற்றி நலத் திட்ட உதவிகள் வழங்கிட வேண்டுமென

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

இன்று (15.09.2023 - வெள்ளிக்கிழமை) பேரறிஞர்அண்ணா பிறந்தநாள் மற்றும்17.9.2023தந்தைபெரியார்பிறந்தநாள்அன்றுகடலூர்கிழக்குமாவட்டத்தில்மாநகர, ஒன்றிய, நகர. பகுதி, பேரூர்பகுதிகளில்அமைந்துள்ளபேரறிஞர் அண்ணாமற்றும்தந்தைபெரியார்அவர்களின்சிலைமற்றும்திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்துமரியாதைசெலுத்தி, கழக கொடியேற்றிநலத்திட்டஉதவிகள்வழங்கிடவேண்டும்.

அதுசமயம் இந்நிகழ்ச்சிகளில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச்செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகரமேயர், ஒன்றிய குழுத் தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிமன்ற தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள், மாவட்டக்குழு, ஒன்றியக் குழு உறுப்பினர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிமன்ற உறுப்பினர்கள், இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, இலக்கிய அணி, கலை , இலக்கிய, பகுத்தறிவுரப் பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர்அணி, மீனவரணி, நெசவாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, பொறியாளர்அணி, மருத்துவர்அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக் குழு அணி, சிறுபான்மையினர்நலஉரிமைப்பிரிவு, தகவல் தொழில்நுட்பபிரிவு அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சுற்றுச்சூழல்அணி, அமைப்புசாராஓட்டுநர்அணி, தொழிலாளர் அணி, அயலக அணி, தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழகமு ன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தாம்பரத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா

மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

சென்னை, செப்.15

செப்டம்பர் 15, 16 , 17ஆகிய நாட்களின் கழகத்தின் நிறுவன தலைவர் அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 115-வது பிறந்த நாள், அறிவு ஆசான் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாள் பவள விழா காணவிருக்கும் கழகம் உதயமான நாள் இம்மூன்று இணைந்த மாபெரும் முப்பெரும் விழா நிகழ்ச்சியை ஆண்டுதோறும் கழகம் முப்பெரும் விழாவாக நடத்தி மகிழ்கிறது. அதை முன்னிட்டு மாநகர் முழுவதும் உள்ள பகுதி கழகங்கள் வட்டக் கழகங்களில் கழக கொடியினை ஏற்றி பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவப்படத்தை மலர்களால் அலங்கரித்து மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்திடுமாறும் 17.09.23 அன்று தந்தை பெரியார் அவர்களின் திருஉருவப்படத்தை மலர்களால் அலங்கரிக்கப்பட்டு மாலை அணிவித்து மலர் தூவி உறுதிமொழி ஏற்று கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேற்சொன்ன நிகழ்ச்சிகளை பகுதி கழகச் செயலாளர்கள் வட்டச் செயலாளர்கள் அனைவரையும் ஒருங்கினைத்து பகுதியிலும் வட்டங்களிலும் ஏற்பாடு செய்து நிகழ்ச்சிகளில் அந்தந்த பகுதிகளுக்கு உட்பட்ட மாநகர பகுதி நிர்வாகிகள் மாவட்ட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் தகவல் தொழில்நுட்ப அணி இளைஞரணி மாணவரணி மகளிர் அணி மற்றும் கழகத் தோழர்கள் பெருமளவில் கலந்த கலந்து கொண்டு சிறப்பித்திட கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மாநகர கழகத்தின் சார்பில் மேற்கு தாம்பரம் சண்முகம் சாலையில் காலை 7 மணி அளவிலும் அதன்பின் தாம்பரம் மாநகராட்சி வளாகத்தில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவ சிலைக்கு காலை 7.30 மணி அளவில் என்னுடைய தலைமையில் (மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ.) மாலை அணிவித்து புகழ் வணக்கம் செலுத்த உள்ளோம். மாநகர் கழகத்தின் சார்பில் ஏற்பாடு செய்கின்ற அனைத்து நிகழ்ச்சியில் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.

அடையாள ஆவணமாக பிறப்பு சான்றிதழ்!

புதுடெல்லி,செப்.15

பிறப்பு மற்றும் இறப்புப் பதிவுச் சட்டம், 2023ன்படி வரும் அக்டோபர் 1ஆம் தேதி முதல், ஓட்டுநர் உரிமம், கல்விநிலையங்களில் சேர என பல்வேறு நடைமுறைகளுக்கும், தனி ஆவணமாக, பிறப்புச் சான்றிதழை அடையாள ஆவணமாகப் பயன்படுத்தலாம் என்று ஒன்றிய அரசு தெரிவித்து உள்ளது.

திருத்தணி மருத்துவமனை வளாகத்தில் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா முன்னிட்டு, திருவள்ளூர் மாவட்டம் மாற்றுத்திறனாளி நல சார்பில் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ மருத்து முகாமை துவக்கி வைத்து 110 மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டை, ஸ்மார்ட் கார்டு அட்டைகள் மற்றும் 13 பேருக்கு ரயிலில் இலவச பயணம் செய்வதற்கான ஆணைகள் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு 1 லட்சத்து 20 ஆயிரம் மதிப்பீட்டில் காது கேட்கும் இயந்திரம் நாற்காலில் கைதாங்கி கால் தாங்கி உள்பட உபகரணங்கள்வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் சீனிவாசன், அதிகாரிகள் மருத்துவர்கள் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் உள்ளனர்.